# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044– 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 280/மா/2023**

**நாள் : 11.10.2023**

திரு. G. தேவா,
வடபழனி, சென்னை – 26. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–10, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, வடபழனி, கருமாரி அம்மன் கோயில் தெரு, எண்.1, பிளாசா மேனர் பிளாட்ஸ், C-50 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G. தேவா என்பவரின் 28.02.2023 நாளிட்ட மனு 01.03.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 280/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, வடபழனி, கருமாரி அம்மன் கோயில் தெரு, எண்.1, பிளாசா மேனர் பிளாட்ஸ், C-50 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G. தேவா என்பவரின் முறையீட்டு மனுவில்,

"நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எங்கள் பகுதியில் பிரசித்தி பெற்ற அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில் உள்ளது. இத்திருக்கோவில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இத்திருக்கோவிலுக்கு சொந்தமான எழும்பூர் - நுங்கம்பாக்கம் வட்டம், புலியூர் கிராமம் T.S.No.60, Block No.2, நெற்குன்றம் பாதை, வடபழனி, சென்னை – 600 026-ல் ஒரு பகுதியான 2000 சதுரஅடி பரப்பளவில் பெருநகர சென்னை மாநகராட்சி அம்மா உணவகம் நடத்தி வருகிறது. அந்த கட்டிடத்தின் முதல் தளத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி பல்நோக்கு கட்டிடம் கட்டி உள்ளது. அதற்கு செலவான தொகை 23.40 லட்சம் ரூபாய் ஆகும். மேலும், எழும்பூர்-நுங்கம்பாக்கம் வட்டம், புலியூர் கிராமம், பகுதி எண்.2, நகர புல எண்.60ல் இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான இடத்தில் அழகிரி நகர், முதல் தெரு, கூட்டுறவு பழைய கடை, எண்.HCO:68 கடைக்கு, தற்போது புதிய எண். JC:068, என்று வழங்கப்பட்டுள்ளது. நியாயவிலை கடை மீது மற்றுமொரு பல்நோக்கு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. அதற்கு ஆன செலவு தொகை 23.60 லட்சம் ரூபாய் ஆகும்.

இவ்விரண்டு கட்டிடங்களுக்கும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10ன் செயற் பொறியாளர் வ. பெரியசாமி, இந்து சமய அறநிலையத்துறை ஆணையரிடம் முறையாக அனுமதி பெறாமல் கட்டி உள்ளார். அதற்குண்டான ஆவணத்தை இத்துடன் இணைத்துள்ளேன். அம்மா உணவகம் நடத்தி வரும் கட்டிடத்தின் முதல் தளத்தில் செயற் பொறியாளர் திரு. வ. பெரியசாமி அவர்கள் உதவி மின் பொறியாளர் அலுவலகம், சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியம் டிப்போ -130 மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி கோட்ட அலுவலகம்- 130 மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி கோட்ட அலுவலகம்-30ன் பெயர் பலகைகளை வைத்துள்ளார். மேலும், அழகிரி நகர் 1வது தெருவில் செயல்படும் பழைய கடை எண்.HCO-68 கடைக்கு தற்போது புதிய எண்.JC-068 என்று வழங்கப்பட்டுள்ளது. நியாய விலை கடை மீது கட்டிய பல்நோக்கு கட்டிடம் மீது கோடம்பாக்கம் சார்-பதிவாளர் அலுவலகம் என்ற பெயர் பலகை வைத்துள்ளார். இரண்டு பல்நோக்கு கட்டிடங்களும் கட்டி நான்கு வருடங்களுக்கு மேல் ஆகிறது. இன்று வரை ஒரு அலுவலகமும் இவ்விரண்டு இடங்களிலும் செயல்படவில்லை. கட்டிடம் கட்டுவதற்கும் இவர் இந்த சமய அறநிலையத்துறையிடம் முறையாக அனுமதி பெறாமல் கட்டி உள்ளார். இரண்டு பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கும் ரூபாய் 47,00,000/- செலவாகி உள்ளது.

இது சம்மந்தமாக 12.09.2020 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான இடத்தில் பழைய கடை எண்.HCO 68-ல் செயல்படும் கடைக்கு தற்போது புதிய எண்.JC-068 என்று வழங்கப்பட்டுள்ள நியாயவிலை கடை சம்மந்தமாக மூன்று கேள்விகள் RTI-ல் கேட்டிருந்தேன். மூன்றுக்கு ஒரே பதிலை வழங்கி தகவலை வழங்க மறுத்துவிட்டார், செயற்பொறியாளர் வ. பெரியசாமி. நியாயவிலை கடை கட்டுவதற்கும் இந்து சமய அறநிலையத்துறையிடம் அனுமதி பெறவில்லை. அதன்மீது கட்டிய பல்நோக்கு கட்டிடத்திற்கும் வ. பெரியசாமி அனுமதி பெறவில்லை. பிறகு இந்து சமய அறநிலையத்துறை, பொதுதகவல் அலுவலர் அவர்களிடம் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் கேட்டதற்கு முறையாக அனுமதி பெற்று கட்டிடம் கட்டவில்லை என்று பதில் அளித்து இருந்தார்கள். அதன் நகலையும் இத்துடன் இணைத்துள்ளேன்.

கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக மண்டலம்-10ன் செயற் பொறியாளராக வ. பெரியசாமி பொறுப்பில் உள்ளார். இவர் கட்டுப்பாட்டில் 127வது கோட்டம் முதல் 135வது கோட்டம் வரை உள்ளது. இவை அனைத்திலும் இவர் கட்டிய பல்நோக்கு கட்டிடங்களை ஆய்வு செய்தால் பல கோடி ரூபாய் முறைகேடு நடந்திருப்பது தெரியவரும். அம்மா உணவகத்திற்கு இடம் வழங்கிய போது இந்து சமய அறநிலையத்துறை விதித்த நிபந்தனைகளில் இரண்டாவது நிபந்தனை திருக்கோயில் அனுமதியின்றி மேற்படி இடத்தில் குத்தகைதாரரால் எவ்வித நிரந்தர கட்டுமானப் பணியும் மேற்கொள்ளக்கூடாது என்று உள்ளது. அதனையும் மீறி பல்நோக்கு கட்டிடம் கட்டியுள்ளார் வ. பெரியசாமி. அதன் நகலையும் இத்தடன் இணைத்துள்ளேன். இது சம்பந்தமாக 05.07.2021 அன்று லஞ்ச ஒழிப்பு துறை இயக்குநர் அவர்களுக்கு மனு அனுப்பினேன். அவர்கள் 09.07.2021 அன்று அனுப்பிய கடிதத்தின் நகலை இணைப்பில் இணைத்துள்ளேன்.

ஆகையால் ஐயா அவர்கள், அனுமதியின்றி இரண்டு பல்நோக்கு கட்டிடங்களை கட்டியதற்கும், அவ்விரண்டு கட்டிடங்களுக்கும் உண்மையாகவே ரூபாய் 47,00,000/- செலவாகி இருக்குமா என்றும், இந்து சமய அறநிலையத்துறையிடம் முறையாக அனுமதி பெறாமல் தான்தோன்றிதனமாக கட்டிடங்களை கட்டி அந்த கட்டிடங்களை எந்த பயன்பாட்டுக்கும் வராமல் மக்கள் வரி பணத்தை வீணடித்துள்ளார் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-10ன் செயற்

பொறியாளர் வ. பெரியசாமி, இவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**3) இம்மனு தொடர்பாக, மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 29.9.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு, 28.9.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**முறையீட்டு மனுதாரர் 29.9.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார் :**

"பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10ல் வடபழனி ஆண்டவர் திருக்கோயில் உள்ளது. இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் இக்கோவில் இடத்தின் ஒரு பகுதியில் அதாவது 2000 சதுர அடி பரப்பளவில் "அம்மா உணவகம்" நடைபெற்று வருகிறது. மேற்கண்ட அம்மா உணவகத்தின் முதல் தளத்தில் உதவி மின் பொறியாளர் அலுவலகம், சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி கோட்ட அலுவலகம் என பெயர் பலகையை மட்டுமே வைத்துள்ளனர். ஆனால் மேற்கண்ட அலுவலகங்கள் அங்கு இயங்கவில்லை. மேற்கண்ட இடத்தில் கட்டடம் கட்டிய வகையில் பெரும் அளவிலான தொகை மாநகராட்சியால் வீணாக செலவு செய்யப்பட்டது. இவ்வாறு கட்டப்பட்ட இடத்தில் மேற்கண்ட அலுவலகங்கள் இயங்காமல் மேற்கண்ட கட்டடம் பயனற்று உள்ளது. இது தொடர்பாக மாநகராட்சியில் புகார் மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறையிடம் முறையாக அனுமதி பெறாமல் தன்னிச்சையாக கட்டடத்தை கட்டி அக்கட்டடம் எவ்வித பயன்பாட்டிற்கு வராமல் உள்ள நிலையில், மேற்கண்ட கட்டடத்தை கட்டிய பொறியாளர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம்-10, உதவி செயற்பொறியாளர் 29.09.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு பதிவு செய்துள்ளார்:**

"பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10ல் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் வடபழனி ஆண்டவர் திருக்கோயில் இடத்தின் ஒரு பகுதியில் பெருநகர சென்னை மாநகராட்சியால் அம்மா உணவகம் நடத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட அம்மா உணவகத்தின் முதல் தளத்தில் மாநகராட்சியால் கட்டடம் கட்டப்பட்டு அதில் மாநகராட்சியின் 130வது கோட்ட அலுவலகமும், சென்னை மின்சார வாரிய உதவிப் பொறியாளர் அலுவலகம் மற்றும் துப்புரவு ஆய்வாளர்கள் பயன்படுத்தும் இடமாகவும் செயல்பட்டு வருகிறது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மேற்கண்ட கட்டடம் முழு பயன்பாட்டில் இருந்து வருகிறது என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-10ன் உதவி செயற் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறியமுடிகிறது.

வடபழனி, திருக்கோவிலுக்கு சொந்தமான எழும்பூர் - நுங்கம்பாக்கம் வட்டம், புலியூர் கிராமம், T.S.No.60, Block 2, நெற்குன்றம் பாதை, வடபழனி, சென்னை 26ல் ஒரு பகுதியான 2000 சதுர அடியில், பெருநகர சென்னை மாநகராட்சி "அம்மா உணவகம்" நடத்தி வருகிறது என்றும், அக்கட்டிடத்தின் முதல் தளத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10 அலுவலகத்தால் எவ்வித அனுமதியுமின்றி ரூ.23.40 லட்சத்தில் கட்டப்பட்டுள்ளது என்றும் மேலும், இந்து அறநிலையத் துறைக்கு சொந்தமான அழகிரி நகரில் உள்ள நியாயவிலை கடை மீது மற்றொரு பல்நோக்கு கட்டடம் அனுமதியில்லாமல் ரூ.23.60 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு இவ்விரு பல்நோக்கு கட்டடங்களும் எவ்வித பயன்பாடும் இல்லாமல் உள்ளது என்றும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு கட்டிடம் கட்டிய வகையில் இழப்பீடு ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்து, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-10ன் அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டவாறு, வடபழனி திருக்கோவிலுக்கு சொந்தமான இடத்திலும், இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான இடத்திலும் அனுமதி பெறாமல் இரண்டு கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளது என்பதும், அக்கட்டடங்களில் மாநகராட்சியின் 130வது கோட்ட அலுவலகமும், சென்னை மின்சார வாரியமும், உதவிப் பொறியாளர் அலுவலகமும், சார் பதிவாளர் அலுவலகம் முறையே உள்ளது என்பது தெரியவருகிறது.

மேற்கண்ட அம்மா உணவகத்தின் மீது கட்டப்பட்டுள்ள கட்டடம், இந்து அறநிலையத் துறையின் 1.4.2023 நாளிட்ட குத்தகை பத்திரத்தில் கண்டுள்ள நிபந்தனைகளுக்கு முரணாக கட்டப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. இருப்பினும், குறிப்பிட்ட இரண்டு கட்டிடங்களும் கட்டப்பட்டு அக்கட்டடத்தால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு எவ்வித வருவாய் இழப்பு இல்லை என்பதை ஏற்றுக்கொள்ள இயலாது. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-10ன் அலுவலர்கள், எந்தவித திட்டமிடுதலும் இல்லாமல் ரூ.40.00 இலட்சம் செலவு செய்து, நகரின் பிரதான இடத்தில் கட்டடம் கட்டி இருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-10ன் அலுவலர்கள் அனுமதியில்லாமல் மேற்கண்ட கட்டடங்களை கட்டியது "வேலியே பயிரை மேய்ந்தது" என்ற பழமொழிக்கு எடுத்துக்காட்டாக உள்ளது என இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. அக்கட்டடங்களிலிருந்து வாடகை பெறாமல், சென்னை மின்சார வாரியம், உதவிப் பொறியாளர் அலுவலகம் மற்றும் துப்புரவு ஆய்வாளர்கள் பயன்படுத்துவது என்பது **ஏற்புடையது அல்ல.** இதனால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம்-10ன் அலுவலர்களே இதற்கு முழு பொறுப்பாவார்கள் என்று இம்முறைமன்றம் கருதுகிறது.

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி குறிப்பாக:-

பிரிவு 7 The Ombudsman shall perform all or any of the following functions, namely-

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) Pass an order on the proved allegation in the following manner, namely-

(a) xxxx

(b) xxxx

(c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules

மற்றும்

பிரிவு: 12(1) The ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manager, namely-

(a) x x x x

(b) x x x x

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body.

(d) x x x x

(e) x x x x

அடிப்படையில் இம்முறை மன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோவிலுக்கு சொந்தமான, எழும்பூர்-நுங்கம்பாக்கம் வட்டம், புலியூர் கிராமம், T.S.60ல் Block No.2, நெற்குன்றம் பாதை, வடபழனியில் உள்ள அம்மா உணவகத்தின் மீது ரூ.23.00 லட்சத்திலும், புலியூர் கிராமம் பகுதி எண்.2 நகர புல எண்.60ல் உள்ள நியாயவிலைக் கடை மீது ரூ.23.60 லட்சத்திலும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-10ன் அலுவலர்களால் இந்து அறநிலையத் துறையிடம் எவ்வித அனுமதி பெறாமலும், திட்டமிடுதல் இல்லாமலும் ரூ.40.00 லட்சத்தில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு அவை பயன்படுத்தப்படாமல் உள்ளது. இந்நிலையில் அக்கட்டடங்களை சென்னை மின்சார வாரிய உதவிப் பொறியாளர் அலுவலக பணியாளர்களும், துப்புரவு ஆய்வாளர்கள் பயன்படுத்தும் இடமாக பயன்படுத்தி வருவதற்கு, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படும் என்று தெரிந்தே செயல்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-10ன் அலுவலகத்தின் சம்பந்தப்பட்ட

அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை இம்முறைமன்றத்திற்கு 45 தினங்களுக்குள் அனுப்பிவைக்குமாறும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2023-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. G. தேவா,
   C-50, பிளாசா மேனர் பிளாட்,
   எண்.1, கருமாரி அம்மன் கோயில் தெரு,
   வடபழனி, சென்னை – 600 026.
2. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. ஆணையர்,
   இந்து சமய அறநிலையத் துறை,
   நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
4. மண்டல அலுவலர்,
   மண்டலம்–10, சென்னை பெருநகர மாநகராட்சி,
   64, என்.எஸ்.கே. ரோடு, இராஜீவ்காந்தி நகர்,
   கோடம்பாக்கம், சென்னை – 600 0024.
5. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை,
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல் : மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்
17/10/23